Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மாணவர்சி தூர்நலனார்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, அக்டோபர் 30, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 108

## சிங்கபெருமாள் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட ராக்கெட் லாஞ்சரை செயலிழக்க செய்ய நடவடிக்கை- உதவி கமிஷனர் தகவல்



சென்னை, அக்டோபர் 30 2022: செங்கல்பட்டு மாவட்டம் சிவபெருமாள் கோவில் அனுமந்தபுரம் மலைப் பகுதியில் ராணுவ பயிற்சி முகாமில் பயிற்சியின் போது ராணுவ வீரர்கள் பயன்படுத்திய 3 சக்திவாய்ந்த ராக்கெட் லாஞ்சர்கள் வெடிக்காத நிலையில் கிடந்ததை அப்பகுதியில் மாடு மேய்ப்பவர்கள் பார்த்தனர். இது குறித்து மறைமலை நகர் போலீசாருக்கு தகவல் கொடுத்ததன் பேரில் சம்பவ இடத்திற்கு உதவி கமிஷனர் சிங்காரவேலன் தலைமையில் மறைமலை நகர் போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துசுப்பிரமணி, வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயல் இழத்தல் துறை அதிகாரிகள் நேரில் சென்றனர். ராக்கெட் லாஞ்சர்களை மீட்டு, குழி தோண்டி சுற்றி மணல் மூட்டை அடுக்கி பாதுகாப்பாக வைத்தனர். இதுகுறித்து உதவி கமிஷனர் சிங்காரவேலன் கூறுகையில், ' ராக்கெட் லாஞ்சர்களை செயலிழக்கச் செய்ய உரிய முறையில் வழக்குப் பதிவு செய்து நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட வெடி பொருள் தடயவியல் துறை நிபுணர்கள் மூலமாக பாதுகாப்பாக செயலிழக்கச் செய்யப்படும்' என்றார்.

## போக்குவரத்து விதிகளை மீறியதாக சென்னையில் 3 நாட்களில் ரூ.42 லட்சம் அபராதம்



சென்னை, அக்டோபர் 30 2022: போக்குவரத்து விதிகளை மீறும் வாகனங்களுக்கான அபராத கட்டணத்தை மத்திய அரசு கடந்த 2019-ம் ஆண்டு அதிரடியாக உயர்த்தியது. இந்த நிலையில் தமிழகத்திலும் போக்குவரத்து விதி மீறல் குற்றங்களுக்கு கடந்த 26-ந்தேதி முதல் அபராத தொகை பலமடங்கு உயர்த்தப்பட்டது. இந்த அபராத உயர்வு சென்னையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி லைசென்ஸ் இல்லாமல் வாகனங்களை ஓட்டினால் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது. மது போதையில் வாகனம் ஓட்டினால் ரூ.10 ஆயிரம் அபராதம் வசூலிக்கப்படுகிறது. இலகுரக வாகனத்தை வேகமாக ஓட்டினால் ரூ.1000மும், நடுத்தர மற்றும் கனரக வாகனத்தை வேகமாக ஓட்டினால் ரூ.2 ஆயிரமும் அபராதம் விதிக்கப்படுகிறது. அதிவேகமாக கண்மூடித்தனமாக வாகனத்தை ஓட்டினாலும், செல்போன் பேசிக்கொண்டே வாகனத்தை ஓட்டினாலும் முதல்முறை ரூ.1000 அபராதம் விதிக்கப்படும். இந்த தவறை மீண்டும் செய்தால் ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது. பைக்ரேசில் ஈடுபட்டால் ரூ.5 ஆயிரம் அபராதம் ஆகும். இந்த நிலையில் கடந்த 26-ந்தேதி முதல் போலீசார் விதிமீறல்களில் ஈடுபடும் வாகன கண்காணிப்பு பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். விதிகளை மீறும் வாகன ஓட்டிகளை மடக்கி அவர்களுக்கு திருத்தி அமைக்கப்பட்ட மோட்டார் வாகன சட்ட விதிகளின் படி உயர்த்தப்பட்ட புதிய அபராதத் தொகையை விதித்து வருகிறார்கள். இந்த நிலையில் சென்னையில் கடந்த 3 நாட்களாக போக்குவரத்து விதிகளை மீறியதாக 6,187 வழக்குகளை போக்குவரத்து போலீசார் பதிவு செய்துள்ளனர். இதில் சுமார் ரூ.42 லட்சம் வரை அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. இதில் 2,293 பேர் உடனடியாக அபராத தொகை செலுத்தியதால் ரூ.16 லட்சத்து 29 ஆயிரம் வசூல் செய்யப்பட்டது. அபராதம் விதிக்கப்பட்டதில் மீதம் ரூ.26 லட்சத்து 74 ஆயிரம் நிலுவையில் உள்ளதாக சென்னை மாநகர போக்குவரத்து காவல் துறை தெரிவித்துள்ளது.

## சோலார் பம்ப்செட் அமைத்த காஞ்சிபுர விவசாயி - மன் கி பாத்தில் பாராட்டிய பிரதமர் மோடி




சென்னை, அக்டோபர் 30 2022: பிரதமர் மோடி ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் வானொலியில் மன் கி பாத் நிகழ்ச்சியில் பேசிவருகிறார். இந்நிலையில், இன்றைய மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: சூரிய சக்தியில் உலகளவில் இந்தியா முன்னிலையில் உள்ளது. சூரிய சக்தியை இந்தியா பெரிய அளவில் பயன்படுத்துகிறது. இன்று நாம் மிகப்பெரிய சூரிய சக்தியை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக மாறிவிட்டோம். நமது நாட்டின் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் வாழ்க்கையை சோலார் எரிசக்தி எவ்வாறு மாற்றுகிறது என்பதும் ஆய்வுப் பொருளாகும். சோலார் சக்தி மூலம் பணத்தை மிச்சப்படுத்த முடியும்.

தமிழகத்தின் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த எழிலன் என்ற விவசாயி, பிரதமர் குஷூம் யோஜனா திட்டத்தின் பயனை அடைந்துள்ளார். அவரது பண்ணையில் 10 குதிரைத்திறன் கொண்ட சோலார் பம்ப் செட்டை அமைத்துள்ளார். இதன்மூலம் அவர் பண்ணையில் விவசாயத்திற்கு என எதுவும் செலவு செய்வது கிடையாது. விவசாய நிலத்தில் பாசனம் செய்ய அரசின் மின் விநியோகத்தை அவர் நம்பியிருக்கவில்லை. இதேபோல் சூரிய சக்தி மூலம் பலர் பயனடைந்துள்ளனர். குஜராத்தின் மோதிரா பகுதியில் பெரும்பாலான வீடுகளில் சோலார் எரிசக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சூரிய மின்சக்தி போல் விண்வெளித் துறையிலும் இந்தியா பல சாதனைகளை படைத்துள்ளது. இந்தியாவின் சாதனைகளை உலகம் ஆச்சரியத்துடன் பார்க்கிறது. சில தினங்களுக்கு முன் விண்வெளியில் 36 செயற்கைக்கோள்களை இந்தியா நிலைநிறுத்தியது. இந்த சாதனை இந்தியாவிற்கு தீபாவளி பரிசாக அமைந்தது. இந்திய இளைஞர்களுக்காக விண்வெளித்துறை வாய்ப்புகள் திறக்கப்பட்டதும், புரட்சிகரமான மாற்றங்கள் வந்து கொண்டுள்ளன. டிஜிட்டல் துறையிலும் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது என தெரிவித்தார்.

## மீனவ கிராமங்களில் கடலரிப்பு தடுப்பு பணிகளை விரைவில் தொடங்க வேண்டும்- முதல்வருக்கு எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ. கோரிக்கை



சென்னை, அக்டோபர் 30 2022: விடுதலை சிறுத்தை கட்சியின் திருப்போரூர் தொகுதி எம்.எல்.ஏ. எஸ்.எஸ்.பாலாஜி, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அளித்துள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:- தாங்கள் பொறுப்பேற்ற நாள் முதல் தொடர்ச்சியாக சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களின் தேவைகளையும் கண்டறிந்து அவ்வப்போது அதற்கான தீர்வை அளித்து வருகிறீர்கள் என்பதில் தமிழ்நாட்டு மக்கள் பெருமகிழ்ச்சியோடு, மிகுந்த நம்பிக்கையோடு உள்ளார்கள். அந்த வகையில் தான் மீனவ சமூகத்தின், மிக அடிப்படை தேவையான உரிய இடங்களில் கடலரிப்பு பாதிப்பை தடுத்திட கரை பாதுகாப்பு அமைப்புகள் ஏற்படுத்துவது, என பல்வேறு மீனவர் பாதுகாப்பு திட்டங்களை தங்களின் தலைமையிலான இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இதையும் படியுங்கள்: கல்லூரி மாணவர் மரணம் வழக்கில் திருப்பம்: குளிர்பானத்தில் விஷம் கலந்து கொடுத்து கொலை- காதலி கைது திருப்போரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொக்கிலமேடு, கரிக்கட்டுக் குப்பம் ஆகிய மீனவ கிராமங்களில் நேர்கல் சுவர் அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தேன். அதனையடுத்து கடலரிப்பினை தடுத்திட நேர்கல் சுவர் அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு, உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு பணி ஆணையம் வழங்கப்பட்டுவிட்டது. திருப்போரூர் ஒன்றியத்தில்

கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள நெம்மேலி(குப்பம்)க்கு கரை பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்த வழிவகை செய்யப்படவில்லை என்பதை உரிய அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு சென்றேன். இதையும் படியுங்கள்: ராமஜெயம் கொலை வழக்கு- 12 பேர் மீது உண்மை கண்டறியும் சோதனை அதற்கு நெம்மேலி மீனவ கிராமத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு பரிந்து ரைத்து இருப்பதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவித்துள்ளனர். ஒப்பம் அளிக்கப்பட்ட பணி துவங்கவில்லை என பலமுறை மீன்வளம் தலைமை பொறியாளர் மற்றும் அடுத்த நிலை பொறியாளர் மற்றும் உதவி இயக்குனர் ஆகியோரை தொடர்பு கொண்டு கடந்த 4, 5 மாதங்களாக கேட்டு வருகிறேன். அதோடு நெம்மேலி திட்டம் குறித்தும் கேட்டு வருகிறேன். திட்டம் வந்து விட்டது என்றும் விரைவில் வந்து விடும் என்றும் நம்பிக்கையோடு காத்திருக்கும் மக்கள், தற்போது கடல் அரிப்பில் தங்கள் உயிருக்கும் உடமைக்கும் கடும் பாதிப்பு ஏற்படும் என்கிற அச்சத்தில் உறைந்து போய் உள்ளனர். ஒப்பம் அளிக்கப்பட்ட கொக்கிலமேடு, கரிக்காட்டு குப்பம், செம்மஞ்சேரி குப்பம், கோவளம் ஆகிய இடங்களில் கரை பாதுகாப்பு பணிகளை உடனே தொடங்கிடவும், திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்ட நெம்மேலி மீனவ கிராமத்திற்கு ஒப்புதல் அளித்து பணியினை தொடங்கிடவும், கடலரிப்பு அதிகம் உள்ள மற்றொரு மீனவ கிராமமான தேவநேரிக்குப்பத்திற்கும் விரைவில் கரை பாதுகாப்பு கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சூரசம்ஹாரம் - அவதாரமெடுத்த சூரபத்மனை வதம் செய்தார் சுவாமி ஜெயந்திநாதர்



சென்னை, அக்டோபர் 30 2022: முருக பெருமானின் அறுபடை வீடுகளில் 2-ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆண்டுதோறும் கந்தசஷ்டி திருவிழா சிறப்பாக கொண்டாடப்படும். கோவிலில் இந்த ஆண்டு கந்தசஷ்டி திருவிழா கடந்த 25-ந்தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் அதிகாலையில் நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தீபாராதனை, உதயமார்த்தாண்ட அபிஷேகம் நடந்தது. காலையில் உச்சிகால அபிஷேகம், தீபாராதனைக்கு பின்னர் யாகசாலையில் சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி-தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரமாகி தீபாராதனை நடைபெற்றது. மதியம் சுவாமி ஜெயந்திநாதர், வள்ளி- தெய்வானையுடன் சண்முகவிலாச மண்டபத்தில் எழுந்தருளினார். மாலையில் திருவாவடுதுறை ஆதீன கந்தசஷ்டி மண்டபத்தில் எழுந்தருளிய சுவாமி-அம்பாள்களுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை நடைபெற்றது.

இரவில் சுவாமி-அம்பாள்களுடன் தங்க ரதத்தில் எழுந்தருளி கிரி வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். விழாவின் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம், 6-ம் நாளான இன்று நடைபெற்றது. இதைமுன்னிட்டு இன்று அதிகாலை 1 மணிக்கு நடைதிறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 2 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகம் நடைபெற்றது. காலை 9 மணிக்கு உச்சிகால அபிஷேகம், மதியம் 1 மணிக்கு சாயரட்சை தீபாராதனை நடைபெற்றது. இந்நிலையில் மாலை 4 மணியளவில் சுவாமி ஜெயந்திநாதர் சூரசம்ஹாரத்துக்கு எழுந்தருளினார். சூரசம்ஹாரத்திற்காக சுவாமி ஜெயந்திநாதர் கடற்கரைக்கு வருகை தந்தார். பின்னர் முதலாவதாக யானை முகம் கொண்ட தாரகாசுரனை சுவாமி ஜெயந்திநாதர் வதம் செய்தார். இரண்டாவதாக, சிங்க முகம் கொண்ட சிங்கமுகாசுரனை சுவாமி ஜெயந்திநாதர் வேலால் வதம் செய்த நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து, தலையை ஆட்டியபடி முருகனுடன் போரிட வந்தான் சூரபத்மன். பின்னர் தன்முகத்தோடு எழுந்தருளிய சூரபத்மனை வதம் செய்தார் சுவாமி ஜெயந்திநாதர். மாமரமாகவும், சேவலாகவும் மாறி முருகனுடன் போரிட வந்தான் சூரபத்மன். சூரனை சம்ஹாரம் செய்து சேவற்கொடியாகவும், மயிலாகவும் ஜெயந்திநாதர் ஆட்கொண்டார். விழாவையொட்டி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பாலாஜி சரவணன் மேற்பார்வையில், திருச்செந்தூர் துணை போலீஸ் சூப்பிரண்டு ஆவுடையப்பன் மேற்பார்வையில் சுமார் 2,700 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# இயக்குநர் பிரபு சாலமன் இயக்கத்தில், கோவை சரளா, அஷ்வின்குமார் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ள திரைப்பட செம்பி இசை வெளியீட்டு விழா !!!



சென்னை, அக்டோபர் 30 2022: டிரைடண்ட் ஆர்ட்ஸ் ஆர் ரவீந்திரன் மற்றும் ஏ ஆர் என்டர்டெயின்மென்ட் அஜ்மல் கான், ரெயா தயாரிப்பில் இயக்குநர் பிரபு சாலமன் இயக்கத்தில், கோவை சரளா, அஷ்வின்குமார் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ள திரைப்படம் "செம்பி". இப்படத்தின் இசை வெளியீட்டு விழா பத்ம பூஷன் உலகநாயகன் கமல்ஹாசன் தலைமையில், திரைப்பிரபலங்கள் கலந்து கொள்ள கோலகலமாக நடைபெற்றது இவ்விழாவினில்..

தயாரிப்பாளர் தனஞ்செயன் பேசியதாவதுஞ்

பிரபு சாலமன் மீண்டும் நம்மை ஆச்சரியப்படுத்துகிறார். எங்கு இப்படியான இடங்களை பிடிக்கிறார் என ஆச்சர்யமாக இருக்கிறது. கோவை சரளா நடிப்பில் மிரட்டியிருக்கிறார். கமல் சார் ஒரு பட விழாவிற்கு வந்தால் அந்தப்படம் கண்டிப்பாக வெற்றி பெறும். இந்தப்படமும் மிகப்பெரிய வெற்றி பெற வாழ்த்துகள். நடிகை கோவை சரளா பேசியதாவது...

இந்தப்படத்தின் ஹீரோ பிரபு சாலமன் சார் தான். அவர் படத்தில் நடிப்பது ஈஸி. அவர் சொல்வதை கேட்டு அதை செய்தால் மட்டும் போதும், பிரமாதமாக வந்துவிடும். இங்கு வந்து வாழ்த்திய அனைத்து பெருமக்களுக்கும் என் நன்றிகள். தயாரிப்பாளர் டி ஜி தியாகராஜன்ஞ்

இசை விழா நாயகன் நிவாஸ் கே பிரசன்னாவிற்கு வாழ்த்துகள். பிரபு சாலமன் மிக அற்புதமான இயக்குநர். அவரது கும்கி படம் பார்த்து அவருடன் வேலை செய்ய வேண்டுமென கேட்டு படம் செய்தோம். இந்தப்படத்தை மிக அற்புதமாக எடுத்திருக்கிறார். கோவை சரளா மிக நன்றாக நடித்திருக்கிறார். படம் வெற்றி பெற என் வாழ்த்துகள். தயாரிப்பாளர் அம்மா டி சிவா பேசியதாவதுஞ்.

கமல் சார் ஒரு படத்திற்கு வந்தால் அது வெற்றிக்கான அறிகுறி. விக்ரம் மூலம் திரைத்துறையையே மீண்டும் ஜொலிக்க வைத்துள்ளார். பிரபு சாலமன் மிக அற்புதமான இயக்குநர். கோவை சரளா மிகச்சிறந்த நடிகை. மனோரமா ஆச்சிக்கு பிறகு அந்த இடத்தை பிடிக்கும் தகுதி கோவை சரளாவுக்கே உண்டு. பிரபு சாலமன் செய்த அற்புதங்களில் ஒன்று தம்பி ராமையா போன்ற நடிகரை தமிழுக்கு கொடுத்தது. படம் வெற்றி பெற வாழ்த்துகள். திரு அருள்பதி பேசியதாவதுஞ்

விக்ரம் படத்திற்காக கமலுக்கு வாழ்த்துகள். இப்படம் வெற்றி பெற வாழ்த்துகள். இயக்குநர் வசந்தபாலன் பேசியதாவதுஞ்

கமல் சார் இன்னும் எல்லோரையும் இன்ஸ்ஃபையர் பண்ணிக்கொண்டு இருக்கிறார். கமல் சார் போன்ற ஆளுமை கிடைத்தது சினிமாவுக்கு பெருமை. மிகக்குறைந்த பட்ஜெட்டில் மைனா, கும்கி என எடுத்து பிரமிக்க வைக்கிறார் பிரபு சாலமன். வெறும் பறவை பறக்கும் இயற்கையை தான் காட்டுகிறார், தியேட்டர் அதிர்கிறது. அதே போல் கோவை சரளா அவர்கள் பிரமிக்க வைக்கும் நடிப்பை தந்துள்ளார். படம் வெற்றி பெற என் வாழ்த்துகள். இயக்குநர் ஆர் வி உதயகுமார் பேசியதாவதுஞ்

கமல் சாருக்கு என்னைவிட தீவிரமான ரசிகன் இருக்க முடியாது. அவரை வைத்து சிங்காரவேலன் படமெடுத்தேன், இன்றும் கொண்டாடும் படமாக இருக்கிறது. அதற்கு காரணம் கமல் சார் தான். அவர் ஒவ்வொரு காட்சியிலும் சின்ன சின்ன நகாசு வேலைகள் செய்து அசத்திவிடுவார். அஷ்வின் அவர்களே கமல் சாரை பார்த்து நடிக்க கற்றுக்கொள்ளுங்கள். தமிழ் சினிமாவில் வெகு சில இயக்குநர்களே இருக்கிறார்கள், அதில் முக்கியமானவர் பிரபு சாலமன். மனோரமா ஆச்சிக்கு பிறகு அந்த இடத்தை நிரப்ப கூடியவர் கோவை சரளா தான். இந்தப்படம் வெற்றி பெற வாழ்த்துகள். திரு நாஞ்சில் சம்பத் பேசியதாவது..

இந்தப்படம் ஒரு இயற்கை நாட்டியம், இந்தப்படத்தில் எதிர்க்கட்சிக்காரனாக ஒரு பாத்திரத்தில் நடிக்க வேண்டும் என்றார் பிரபு சாலமன், அதுவே தான் எனது விருப்பமும். நான் நன்றாக நடித்ததாக கோவை சரளா சொன்னார். அவரை வாழும் மனோரமா என்றார்கள். அவர் ஆளும் மனோரமா. இந்தப்படம் பெரிய வெற்றி பெற வாழ்த்துகள். திரு பழ கருப்பையா பேசியதாவதுஞ்

ஒரு நாள் போன் செய்து இப்படத்தில் நடிக்க வேண்டும் என்றார். நடிக்க வையுங்கள் நான் நடிக்கிறேன் என்றேன். ஒரு காட்சிக்கு ஒரே வசனத்தை பல வடிவங்களில் சொல்லி நடிக்க வைப்பார். அது சரியான வடிவம் பெறும் வரை விட மாட்டார். மிகச்சிறந்த இயக்குநர். படம் வெற்றி பெற ஆதரவு தாருங்கள் நன்றி. கே. பாக்யராஜ் பேசியதாவதுஞ்

கமல் விழாவுக்கு வந்தால் படம் ஜெயிக்கும் என்று இங்கு சொன்னார்கள். அந்த ராசி எனக்கும் இருக்கு அவர் நடித்த 16 வயதினிலே தான் எனக்கும் ஆரம்பம். அந்தப்படத்தில் அவரது திறமையை பிரமித்து பார்த்திருக்கிறேன். அதே போல் கோவை சரளா அவர்களை எட்டு வயதிலிருந்தே எனக்கு தெரியும். முந்தானை முடிச்சு படத்தில் என்னிடம் அடம்பிடித்து நடித்தார். அவரை மனோரமா போல் என்றார்கள் அது உண்மையான கருத்து. இந்தப்படத்தில் நடிப்பில் அசத்தியிருக்கிறார். பிரபு சாலமன் மிகச்சிறந்த இயக்குநர். கும்கி படத்தில் அவரை பார்த்து பிரமித்தேன். இந்தப்படம் டிரெய்லரே அற்புதமாக இருக்கிறது படம் வெற்றி பெற வாழ்த்துகள். டாக்டர்.ஐசரி கே கணேஷ் பேசியதாவதுஞ்

பிரபு சாலமன் எனக்கு மிகவும் பிடித்த இயக்குநர். அவரை வைத்து என் தயாரிப்பு நிறுவனத்தில் படம் செய்ய ஆசைப்பட்டேன். அது வரும் காலத்தில் நடக்கும் என நம்புகிறேன். கோவை சரளா மேடம் இந்தப்படத்தில் அசத்தியிருக்கிறார். டிரெய்லரே படம் நன்றாக இருக்குமென்பதை சொல்கிறது. படம் வெற்றி பெற வாழ்த்துகள். இயக்குநர் கே எஸ் ரவிக்குமார் பேசியதாவது...

டிரைடண்ட் ஆர்ட்ஸ் ஆர் ரவீந்திரன் தயாரிப்பில் முந்தைய படங்கள் பெரிய வெற்றி பெற்றுள்ளன. அது போல் இந்தப்படமும் பெரிய வெற்றி பெறும். உங்களுக்கு கமல் சார் சப்போர்ட் இருக்கிறது. அவரால் நானே தெனாலி படத்தில் தயாரிப்பாளராக மாறினேன். கோவைசரளாவை நாயகியாக்கினார். அது போல் அவர் சப்போர்ட் இருக்கும் போது எளிதாக ஜெயிக்கலாம். இந்தப்படமும் ஜெயிக்கும் வாழ்த்துகள். நடிகர் அஷ்வின் பேசியதாவதுஞ்

படம் பண்ணுவதே எனக்கு பாக்கியம். ரவி சார் எனக்கு முதல் படம் கொடுத்ததோடு இரண்டாவது படமும் கொடுத்தார். பிரபு சாலமன் சார் படம் என்றவுடனே நான் எதுவுமே கேட்கவில்லை. நான் ஓகே வா சார் எனக்கேட்டேன், அவர் எனக்கு செய்ததை திரையில் நீங்கள் பார்ப்பீர்கள். கமல் சார் பக்கத்தில் நிற்பதே பெருமை. அவர் வந்து வாழ்த்தியது மிகப்பெரிய பெருமை. இப்படத்திற்கு ஆதரவு தாருங்கள் நன்றி. நடிகர் தம்பி ராமையா பேசியதாவதுஞ்

கமல் சார் கலையின் நாயகன். அவர் இருக்கும் மேடையில் இருப்பது மகிழ்ச்சி. இந்தப்படத்தின் நாயகன் பிரபு சாலமன், நடிப்பு ராட்சசி கோவை சரளா எல்லோருக்கும் நன்றி. படம் வெற்றி பெற ஆதரவு தாருங்கள். இயக்குநர் பிரபு சாலமன் பேசியதாவதுஞ்

படத்தில் என்னுடன் தோள் கொடுத்து உழைத்த அனைத்து கலைஞர்களுக்கும் பெரும் நன்றி. உங்களால் தான் இந்தப்படம் சாத்தியமானது. இந்தப்படத்தின் பாத்திரத்திற்காக பல காலம் அலைந்திருக்கிறேன். கொடைக்கானலில் இருந்து கொல்லிமலை வரை பலரை தேடினோம் இறுதியில் கமல் சாரின் சதிலீலாவதி ஞாபகம் வந்தது, உடனே கோவை சரளா மேடமை பார்த்து கதை சொன்னேன். என்னால் முடியுமா என்றார்கள், உங்களால் கண்டிப்பாக முடியும் என்றேன் படத்தில் அசத்திவிட்டார். இந்தப் படத்தில் அனைவருமே கடுமையாக உழைத்துள்ளார்கள். இந்தப்படத்திற்கு இசையால் உயிர் கொடுத்த நிவாஸுக்கு நன்றி. ரசிகனின் ரசனையை உயர்த்துகிற கமல் சார் இங்கு வாழ்த்தியது எனக்கு பெருமை. எல்லோருக்கும் நன்றி. நடிகர் கமல்ஹாசன் பேசியதாவதுஞ்

கோவைசரளாவை அக்கா, அம்மா என்று கூப்பிடுகிறார்கள், நான் என்ன சொல்வது என தெரியவில்லை. சரளா பாப்பாவை எனக்கு நன்றாக தெரியும். இதில் நன்றாக நடித்துள்ளார். எட்டு வயது பாப்பாவும் தயக்கமில்லாமல் நடித்துள்ளார். பலருக்கு இது வராது. கேமரா ஆன் பண்ணியவுடன் அழுகை சிரிப்பு எதுவும் வராது. என்னையே திட்டியிருக்கிறார்கள். நடிப்பு வாய்ப்பு தேடும் காலத்தில் என்னையே பலர் திட்டியிருக்கிறார்கள். என்ன சார் கோவணம் எல்லாம் கட்டிக்கிட்டு என சொன்னார்கள். ஆனால் இப்போது அதை கொண்டாடுகிறார்கள் அதைக்கேட்க சந்தோஷமாக இருக்கிறது. ஒரு படம் பெரிய படமா சின்ன படமா என்பது காலம் கடந்து பேசப்படுவதில் தான் இருக்கிறது. இப்போது 16 வயதினிலே படத்தை பேசுகிறார்கள், அது தான் பெரிய படம். இத்தனை கோடியில் எடுத்தோமே அது என்ன படம் எனக்கேட்டால் அது பெரிய படம் இல்லை. கொடைக்கானலில் மிக நல்ல லொகேஷன்களில் எடுத்திருக்கிறார். நான் படம் பார்த்து விட்டேன். தப்பு நடக்கும்போது நாம் கேள்வி கேட்க தயங்குவதை தைரியமாக பேசியுள்ளதென்பதால் எனக்கு மிகவும் பிடித்த படம். ரசிகர்கள் நல்ல படத்தை பாராட்ட வேண்டும் படம் நல்லாயில்லை என்றாலும் தைரியமாக சொல்ல வேண்டும். அப்போது தான் சினிமா வளரும். நல்ல படத்திற்கு என் ஆதரவு எப்போதும் இருக்கும். பெரும் திறமையாளர்கள் என் கண் முன்னால் வாய்ப்பில்லாமல் அழிந்து போயிருக்கிறார்கள், அதனால் நல்லவற்றை பாராட்ட தயங்காதீர்கள். கற்றுக்கொள்ள தயாராக இருங்கள். அஷ்வின் நன்றாக நடித்திருக்கிறார். தம்பி ராமையா அசால்ட்டாக நடித்திருக்கிறார். நான் ரசித்து பார்த்தேன். நாஞ்சில் நடிப்பும் பிரமாதமாக இருந்தது. கேமரா மிக அற்புதமாக இருந்தது. அனைவருக்கும் என் வாழ்த்துகள். நல்ல படம் வெற்றிப்படம் என்பதை ரசிகர்களே முடிவு செய்வார்கள். செம்பி மிகப்பெரிய வெற்றி பெறும், வாழ்த்துகள்.

# சென்னை நந்தனத்தில் உள்ள முத்துராமலிங்க தேவர் சிலைக்கு தலைவர்கள் மாலை அணிவிப்பு






சென்னை, அக்டோபர் 30 2022: பசும்பொன் முத்துராமலிங்க தேவர் 115-வது பிறந்த நாளையொட்டி சென்னை நந்தனத்தில் உள்ள அவரது சிலைக்கு ஒவ்வொரு அரசியல் கட்சி சார்பிலும் தலைவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். தமிழக அரசு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மு.பெ.சாமிநாதன், டி.ஆர்.பாலு எம்.பி., செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், எம்.எல்.ஏ.க்கள் மயிலை வேலு, தாயகம் கவி, மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், கே.கே.நகர் தனசேகரன், செய்தி துறை இயக்குனர் ஜெயசீலன் உள்பட முக்கிய பிரமுகர்கள் மாலை அணிவித்தும், படத்துக்கு மலர் தூவியும், மரியாதை செலுத்தினர். அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நந்தனத்தில் உள்ள தேவர் சிலைக்கு மாலை அணிவித்து படத்துக்கும் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவருடன் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன். முன்னாள் அமைச்சர்கள் பொன்னையன், கே.பி.முனுசாமி, ஓ.எஸ்.மணியன், டி.ஜெயக்குமார், வளர்மதி, கோகுல இந்திரா, பொள்ளாச்சி ஜெயராமன், மாதவரம் மூர்த்தி, பாண்டிய ராஜன், சரோஜா, அக்ரி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட செயலாளர்கள் சத்யா, வேளச்சேரி அசோக், விருகை ரவி, ராஜேஷ், கந்தன், திருவள்ளூர் தெற்கு மாவட்ட செயலாளர் வி.அ□லக்சாண்டர். எம்.ஜி.ஆர். இளைஞர் அணி மாநில இணைச்செயலாளர் டாக்டர் சுனில், முகப்பேர் இளஞ்செழியன். கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வக்கீல் ஆ.பழனி, திருமங்கலம் கே.மோகன், கே.பி.முகுந்தன், கொளத்தூர் கணேசன், சைதை சொ.கடும்பாடி, வேளச்சேரி மூர்த்தி, ஏ.எம். காமராஜ், வக்கீல் சதாசிவம், எம்.ஜி.அர்.நகர் வெற்றிவேல் உள்பட ஏராளமான கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். காங்கிரஸ் கட்சி சார்பில் திருநாவுக்கரசர் எம்.பி. தலைமையில் காங்கிரசார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் நிர்வாகிகள் தாமோதரன், மாவட்ட தலைவர் சிவராஜ சேகரன் மற்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் பட்டுக்கோட்டை என்.ராஜேந்திரன், மாணவர் காங்கிரஸ் மாநில ஒருங்கிணைப்பாளர் யஷ்வந்த் சாகர் உள்பட பலர் கலந்து கொண்டு மாலை அணிவித்தனர். பா.ம.க. சார்பில் முன்னாள் மத்திய மந்திரி ஏ.கே.மூர்த்தி, ஜெயராமன், உள்பட பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பா.ஜனதா கட்சி சார்பில் பொதுச்செயலாளர் கரு.நாகராஜன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன், சதீஷ்குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் தலைமையில் நிர்வாகிகள் தேவர் சிலைக்கு மாலை அணிவித்தனர். மேலும் கவிஞர் வைரமுத்து, நடிகர் எஸ்.வி.சேகர், தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பல்வேறு தேவர் சமுதாய அமைப்புகள் சார்பிலும் ஏராளமானோர் திரண்டு வந்து நந்தனம் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். தேவர் சிலைக்கு ஏராளமான பெண்கள் பால்குடம் எடுத்து வந்து பால் அபிஷேகம் செய்தனர். மேற்கு மாம்பலத்தில் தென் சென்னை பா.ஜ.க. மாவட்ட துணைத்தலைவர் நாச்சிக்குளம் சரவணன் ஏற்பாட்டில் தேவர் ஜெயந்தி விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தேவர் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. பா.ஜ.க. நிர்வாகிகள் சிவராமகிருஷ்ணன், தஞ்சை ராமநாதன், டாக்டர் வெங்கடேசன், நாகேஷ் ராஜன், தி.நகர் விக்னேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# கல்லூரி மாணவர் மரணம் வழக்கில் திருப்பம்: குளிர்பானத்தில் விஷம் கலந்து கொடுத்து கொலை- காதலி கைது



சென்னை, அக்டோபர் 30 2022: கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூரில் உள்ள தனியார் கல்லூரியில் படித்து வந்தவர் ஷரோன் ராஜ் (வயது 23). இவரது சொந்த ஊர் தமிழக-கேரள எல்லையில் உள்ள பாறசாலை முரியங்கரை ஆகும். அந்த பகுதியைச் சேர்ந்த இளம்பெண்ணை ஷரோன் ராஜ் காதலித்துள்ளார். கடந்த 14-ந்தேதி அந்த பெண்ணின் வீட்டிற்கு தனது நண்பருடன் சென்றுள்ளார். வீட்டிற்குள் அவர் மட்டும் சென்று திரும்பினார். சிறிது நேரத்தில் வயிறு வலிப்பதாக கூறிய அவரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தனர். திருவனந்தபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஷரோன் ராஜ் கடந்த 25-ந்தேதி பரிதாபமாக இறந்தார்.

அவரது கிட்னி உள்பட உடல் உறுப்புகள் செயல் இழந்திருந்ததால் பாறசாலை போலீசாருக்கு மருத்துவர்கள் தகவல் கொடுத்தனர். இதற்கிடையில் தனது மகன் சாவில் மர்மம் உள்ளது. அவன் காதலித்த பெண் கொடுத்த குளிர்பானத்தை குடித்த பிறகே ஷரோன் ராஜுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவரது தந்தை ஜெயராஜன் போலீசில் புகார் கொடுத்தார். இந்த புகார் தொடர்பாக பாறசாலைபோலீசார் உரிய விசாரணை நடத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார். இதற்கிடையில் இந்த வழக்கு மாவட்ட குற்றப்பிரிவு போலீசுக்கு மாற்றப்பட்டது. திருவனந்தபுரம் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸ் துணை சூப்பிரண்டு தலைமையில் போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

அவர்கள் ஷரோன் ராஜின் நண்பரை விசாரித்தபோது, பெண்ணின் வீட்டில் குளிர்பானம் குடித்ததாக ஷரோன் ராஜ் தெரிவித்ததாக கூறினார். இதன் அடிப்படையில் அந்த பெண் மற்றும் அவரது பெற்றோரிடம் விசாரணை நடத்த போலீசார் முடிவு செய்தனர். இதற்காக அவர்களை விசாரணைக்கு ஆஜராகும்படி அறிவுறுத்தினர். இதையடுத்து இன்று மாலை அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. இந்நிலையில் இந்த வழக்கில் பரபரப்பு தகவல் வெளியாகி உள்ளது. தமிழக - கேரள எல்லையில் கல்லூரி மாணவன் ஷரோன் ராஜ் உயிரிழந்த விவகாரத்தில் காதலியே விஷம் கொடுத்து கொலை செய்தது விசாரணையில் அம்பலமாகி உள்ளது. குளிர்பானத்தில் விஷம் கலந்து கொடுத்து கொன்றதாக காதலி கிரீஷ்மா பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார். இதையடுத்து கிரீஷ்மாவை போலீசார் கைது செய்துள்ளனர்.

# காஷ்மீரில் இதுவரை 30 ஆயிரம் பேருக்கு அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது- பிரதமர் மோடி



சென்னை, அக்டோபர் 30 2022: காஷ்மீரில் மத்திய அரசு பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் நடந்தது. இதை பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:- 2019ம் ஆண்டு முதல் இதுவரை ஜம்மு காஷ்மீரில் கிட்டதட்ட 30 ஆயிரம் அரசு பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன என்றும், இவற்றில் கடந்த 1 முதல் 1லு ஆண்டுகளில் கிட்டதட்ட 20 ஆயிரம் வேலைகள் வழங்கப்பட்டு உள்ளன என்றும் என்னிடம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஜம்மு காஷ்மீர் ஒவ்வொரு இந்தியனின் பெருமையாகும். பழைய சவால்களை விட்டு விட்டு புதிய வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டிய நேரம் இதுவாகும். வேகமான வளர்ச்சிக்கு புதிய அணுகுமுறையிலும், புதிய சிந்தனையுடனும் பணியாளர்கள் செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. நாம் அனைவரும் இணைந்து ஜம்மு காஷ்மீரை புதிய உச்சத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். அரசு பணி நியமனங்களை பெற்ற 30 ஆயிரம் பேருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். அரசாங்க திட்டங்கள் பலன்கள் எந்த பாகுபாடும் இல்லாமல் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவையும் சென்றடைய வேண்டும் என்பதே எங்கள் முயற்சியாகும். காஷ்மீரில் 2 எய்ம்ஸ், 7 புதிய மருத்துவ கல்லூரிகள் திறப்பு மூலம் சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காஷ்மீருக்கு ரெயில்கள் மூலம் இணைப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு மோடி பேசினார்.

# திருமாவளவனுக்கு அண்ணாமலை திடீர் பாராட்டு



சென்னை, அக்டோபர் 30 2022: விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் பா.ஜனதா பற்றியும் சனாதன தர்மம் பற்றியும் கடுமையாக விமர்சித்து வருகிறார். அதே நேரம் தி.மு.க. கூட்டணியில் வலுவான கட்சியாக அங்கம் வகித்திருக்கும் திருமாவளவன் மாநில அரசியலையும் தாண்டி தேசிய அளவில் அரசியலில் இடம்பெற புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். இதன் காரணமாகவே தெலுங்கானா மாநில முதல்வர் சந்திரசேகரராவ், குஜராத் மாநில முன்னாள் முதல்-மந்திரி கேசுபாய் பட்டேல் உள்ளிட்டோரை சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் திருமாவளவனை பாராட்டி தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை தெரிவித்திருக்கும் கருத்துக்கள் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அண்ணாமலை அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:- விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் ஆர்.எஸ்.எஸ். பற்றி கடுமையான கருத்துக்களை முன் வைத்துள்ளார். சனாதனம் பற்றியும் கடுமையாக விமர்சித்து வருகிறார். இதே திருமாவளவன் வேறு வேறு காலகட்டங்களில் வேறு வேறு கருத்துக்களை கூட முன் வைத்தது உண்டு. அடிப்படையில் பார்த்தால் சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதாகவே திருமாவளவன் பாடுபடுகிறார். இதற்கான முறைகளும், அர்த்தங்களும் வேண்டுமானால் மாறுபடலாம். ஆனால் பா.ஜனதாவும் இதையேதான் விரும்புகிறது. திருமாவளவனுக்கும் எங்களுக்கும் நிறைய கருத்து வேறுபாடு இருக்கிறது. மிக கடுமையாக விமர்சித்து கொள்கிறோம். ஆனால் அடிப்படையில் நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதில் ஒரே சிந்தனையுடன் தான் பயணிக்கிறோம். பா.ஜனதாவில்கூட பட்டியல் இன தலைவர்களும், பிற்படுத்தப்பட்ட இன தலைவர்களும் வட இந்தியாவில் சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க கடுமையாக உழைத்து வருகிறார்கள். எங்கள் பக்கம் வரக்கூடாது என்று நாங்கள் அவர்களை சொல்லவில்லை. திருமாவளவன் உள்ளிட்டவர்களையும் நட்பு சக்தியாகவே பார்க்கிறோம். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

தி.மு.க. கூட்டணியில் முக்கிய கட்சியாக விடுதலை சிறுத்தைகள் இருக்கிறது. இந்த நிலையில் திருமாவளவனை நட்பு சக்தியாகவே பார்க்கிறோம் என்று அண்ணாமலை குறிப்பிட்டிருப்பதும் எங்கள் பக்கம் வரக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை என்று கூறி இருப்பதும் மறைமுகமாக திருமாவளவனுக்கும் அழைப்பு விடுத்துள்ளதாகவே பார்க்கப்படுகிறது. பாராளுமன்ற தேர்தலுக்கான வியூகங்கள் வகுக்கப்பட்டு வரும் நிலையில் பா.ஜனதாவின் இந்த புதிய அணுகுமுறை எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெரியவில்லை.

# தி.மு.க. ஆட்சியில் பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை- அண்ணாமலை



சென்னை, அக்டோபர் 30 2022: பசும்பொன் முத்துராமலிங்கதேவரின் ஜெயந்தி விழா மற்றும் குருபூஜை விழாவை முன்னிட்டு தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை இன்று மதுரை வந்தார். அவர் கோரிப்பாளையத்தில் உள்ள தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் மாநில நிர்வாகி எச்.ராஜா, மாநகர் மாவட்ட தலைவர் மகா சுசீந்திரன் உள்பட நிர்வாகிகள் பலர் வந்திருந்தனர். பின்னர் அண்ணாமலை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- பசும்பொன் முத்துராமலிங்கதேவர் பிறந்து வளர்ந்த மதுரை மண்ணில் அவருக்கு மரியாதை செய்வது பெருமையை தருகிறது. பசும்பொன் தேவர் திருமகனார் அற்புதமான பல்வேறு கருத்துக்களை விட்டுச் சென்று உள்ளார். அதிகாரிகள் ஆளுங்கட்சியின் கைப்பாவையாகி விட்டனர். தி.மு.க. ஆட்சியில் பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்ற சூழ்நிலை நிலவி வருகிறது. எனவே தேவர் மீண்டும் அவதரிக்க வேண்டும். தமிழ் மண் எப்படி இருக்க வேண்டும்? என்று அவர் நினைத்தாரோ அதனை பாரதிய ஜனதா நிச்சயமாக நனவாக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# புதுப்பிக்கத்தக்கவைகளில் தமிழகம் ஏற்கனவே முன்னணியில் உள்ளது, ஆனால் கடல் காற்று பயன்படுத்தப்படாத சாத்தியமாக உள்ளது

சென்னை, அக்டோபர் 30 2022: இந்தியாவில் சூரிய ஆற்றலைப் போலவே கடல் காற்றையும் விரைவாக அளவிடுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும், <https://www.wri.org/research/winds-change-learnings-indian-offshore-wind-energy-sector>' என்ற ஒரு பணிக் கட்டுரையை, இன்று, வேர்ல்ட் ரிசோர்ஸஸ் இன்ஸ்டிடியூட் இந்தியா மற்றும் டேனிஷ் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரட்சர் ஃபண்ட் ஆகியோர் இணைந்து அறிமுகப்படுத்தினர். இந்தியாவில் வேகமாக மாறிவரும் துறை பற்றி கலந்தாலோசிக்க நமது தேசிய தலைநகரில், டபிள்யூ ஆர் ஐ இந்தியாவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆக்சிலரேட்டிங் க்ளீன் எனர்ஜி இன் இந்தியா ஏசிஈ 2022 என்ற இரண்டு நாள் வருடாந்திர நிகழ்வின் ஒரு பகுதியாக இந்த அறிமுகம் இருக்கும்.

சிஓபி என பிரபலமாக அறியப்படுகிற, காலநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு (யுனைடெட் நேஷன்ஸ் கன்வென்சன் ஆன் க்ளைமேட் சேஞ்ச்), எகிப்தில் உள்ள ஷர்ம்-எல்-ஷேக்கில் சந்திப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பாக, எரிசக்தித் துறை முழுவதும் உள்ள தலைவர்கள், ஏசிஈ 2022 இல், காலநிலை மாற்றத்தை தணிக்கவும், ஆற்றல் பாதுகாப்பை அடையவும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இந்தியாவின் பங்கை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய மின்சார ஆணையத்தின் தலைவர் திரு. கன்ஷ்யாம் பிரசாத், "எரிசக்தி மாற்றத்தில் கவனம் செலுத்தும் அதே வேளையில், எரிசக்தி பாதுகாப்பு, ஆற்றல் சுதந்திரம் மற்றும் நுகர்வோருக்கு எரிசக்தி நம்பகத்தன்மை ஆகியவற்றில் இந்தியா கவனம் செலுத்த வேண்டும்" என்றார்.

நிகழ்ச்சிக்கு முன்னதாக பிரதிநிதிகளுடன் பகிர்ந்து கொண்ட செய்தியில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திருமதி வந்தனா குமார் ஐஏஎஸ், இந்தியா ஆற்றல் மாற்றத்தின் உச்சத்தில் உள்ளதாகக் கூறினார். மேலும் அவர் கூறினார், "புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவப்பட்ட திறனில், இந்தியா, இன்று நான்காவது இடத்தில் உள்ளது. கடந்த எட்டு ஆண்டுகளில் ஆர் ஈ திறன் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் சூரிய ஒளி திறன் 25 மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் நாங்கள் எங்கள் விருதுகளில் தணிவடையவில்லை. நிர்வகிக்கப்பட்ட கொள்கை மற்றும் திட்ட முயற்சிகள் மற்றும் கட்டமைப்பு மாற்றங்கள் ஆகியவற்றின் தொகுப்புகளின் காரணமாக இதை நாங்கள் அடைந்துள்ளோம்."

ஏசிஈ 2022 இன் ஒரு கவனம் ஆனது, சூரியனைத் தவிர மற்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளர்ச்சியைப் பற்றி விவாதிக்கப்பட்டது. கடலோர காற்றாலை தொழில்நுட்பத்தில் சமீபத்திய முன்னேற்றங்கள், இதை மலிவாகவும், உலகளாவிய மக்கள்தொகையின் பெரும்பகுதிக்கு சாத்தியமானதாகவும் செயல்படுத்தமுடியும். இந்தியாவில், குஜராத் மற்றும் தமிழ்நாடு கடற்கரையில் உள்ள நீர்நிலைகள் மட்டும் 70 ஜி டபிள்யூ காற்றாலை ஆற்றல் திறனைக் கொண்டுள்ளன. இந்தியாவின் ஆற்றல் மாற்றத்தில் குறிப்பாக பல் வேறு தொழில்நுட்பங்களில் 2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் 500 ஜி டபிள்யூ ஆர் ஈ இலக்கிற்கு கடலோரக் காற்று எவ்வாறு முக்கியப் பங்காற்ற முடியும் என்பதை இந்த ஆய்வறிக்கை ஆய்வு செய்தது.

தமிழ்நாட்டில் மட்டும் 35 ஜிகாவாட் கடலோரக்காற்றின் திறன் உள்ளது, மேலும் சமீபத்திய ஆய்வுகள் மாநிலத்தின் வளர்ச்சி தேவைப்படும் துறைமுகங்களைக் கண்டறிந்துள்ளன. கடலோர காற்றுத் திட்டங்களை முன்னிலைப்படுத்துவதற்குத் தேவையான விநியோகஸ்தத்தைக் கையாள்வதில் தூத்துக்குடி சிறந்த இடமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால் மீனவ சமூகங்களின் வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதம் பற்றிய கவலைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கடற்கரை காற்றாலை ஆற்றல் பற்றிய குழு விவாதத்தை நடத்துகையில், டபிள்யூ ஆர் ஐ மிஸீபீவீணீ வின் எனர்ஜி துறையின் மூத்த மேலாளரும் ஆய்வறிக்கையின் ஆசிரியர்களில் ஒருவருமான திருமதி கஜோல், "அதிக அளவிலான பொருளாதாரத்தை அடைய உதவும் கடலோர காற்றாலை ஆற்றலை செயல்படுத்துவதற்கு, ஒப்பந்த நிர்ணயங்கள், சாத்தியமான கடல் காற்று கொள்முதல் கடமைகள் மற்றும் ஆக்கப்பூர்வமான நிதி மாதிரிகள் தேவை. 2015 ஆம் ஆண்டின் தேசிய கடலோரக்காற்று ஆற்றல் கொள்கையை புதுப்பித்து மேம்படுத்துவது இந்தத் துறைக்கு அடித்தளமாக அமையும்." என்று கூறினார்.

நிகழ்வில் பேசிய, மேக் ஆர்தர் பவுண்டேஷன் இந்தியாவின் துணை இயக்குனர் திரு.ஜர்னைல் சிங், "உலகளாவிய தொண்டு நிறுவனங்கள் தீவிர வானிலை நிகழ்வுகளை சமாளிப்பதை உறுதி செய்வதில், உலகின் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் கவனம் செலுத்துகின்றன. நாம் ஏற்கனவே அவற்றை எதிர்கொள்ளத் தொடங்கினோம், மேலும் தூய்மையான ஆற்றல் வடிவங்களுக்கு மாறுவது காலநிலை மாற்றத்தைத் தணிக்க ஒரு முக்கிய அங்கமாகும். இந்த மாற்றத்தை அடைவதில் இந்தியாவின் தலைமை, உலகப் பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு ஒரு முன்னோடியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை." என்று கூறினார்.

ஏசிஈ இன் மற்ற அமர்வுகளில், இந்தியாவின் ஆற்றல் மாற்றத்தில் மாநிலங்களின் ஆர்ஈ ஏஜென்சிகளின் பங்கை மேம்படுத்துவதற்கான வழிகள் பற்றிய விவாதம் இருந்தது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையின் ஆரம்ப நாட்களையும், கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கு முன்பு, ஆரம்பகட்ட ஆர் ஈ தொழில்நுட்பங்கள் நாடு முழுவதும் பல் வேறு அமைப்புகளில் கையாளப்பட்டபோது, மாநில நோடல் ஏஜென்சிகளை அமைப்பதன் மூலம் அரசாங்கம் ஆற்றிய முக்கிய பங்கையும் குழு உறுப்பினர்கள் நினைவு கூர்ந்தனர். ஆனால், வேகமாக வளர்ச்சியடைந்த ஆர் ஈ துறையின் தேவைகளை சிறப்பாகச் செய்ய இந்த ஏஜென்சிகளுக்குத் தேவையான கவனம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றத்திலும் அவர்கள் விவாதித்தனர்.

ஏசிஈ இன் வரலாறு மற்றும் நோக்கத்தை நினைவு கூர்ந்து, டபிள்யூ ஆர் ஐ india வின் எரிசக்தி துறையின் செயல் இயக்குநர் திரு.பரத் ஜெய்ராஜ், "உலகளாவிய ஆற்றல் மாற்றங்கள் மற்றும் இந்தியாவில் அவற்றின் தாக்கங்கள் பற்றிய தற்போதைய மற்றும் வளர்ந்து வரும் ஆராய்ச்சி போக்குகளைப் பற்றி விவாதிப்பதற்கான ஒரு இடமாக ஏசிஈ உருவாக்கப்பட்டது. 2020 மற்றும் 2021 தொற்றுநோய் வருடங்களின் இடைவேளைக்குப் பிறகு அதன் மூன்றாவது பதிப்பில், கார்பன் நடுநிலைமை, புதுப்பிக்கத்தக்கவை மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்த உறுதிமொழிகளின்படி, இந்தியா வாழ்வதை உறுதி செய்வதற்காக, டபிள்யூ ஆர் ஐ india வில் நாங்கள், இந்த விவாதங்கள் மற்றும் பலவற்றை எதிர்பார்க்கிறோம்." என்று கூறினார்.

ஏசிஈ 2022 இன் இரண்டாம் நாள், கூரை சூரிய ஆற்றல் கனரகத் தொழில்களை ஆழமான கார்பனகற்றம் செய்வதற்கான பாதைகள் மற்றும் மின் விநியோக நிறுவனங்கள் தங்கள் கட்டிடங்களில் மின்சார வாகனங்களின் ஆற்றல் தேவையின் வரவிருக்கும் எழுச்சியை திறம்படக் கையாள பயன்படுத்தக்கூடிய கருவிகள் போன்ற புதுப்பிக்கத்தக்க தொழில்நுட்பத்தின் புதிய வடிவங்களுக்கான பயனுள்ள நிதி மாதிரிகளை உருவாக்குவதை ஆலோசித்தனர்.

# தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் முதல் அரையாண்டு நிதிநிலை அறிக்கை 2022 - 2023



சென்னை, அக்டோபர் 30 2022: தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியானது தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு, 1921ம் ஆண்டு துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வரும் பாரம்பரியம் மிக்க பழமையான தனியார் துறை வங்கியாகும். வங்கியானது தனது வரலாற்றில் தொடர்ந்து 100 வருட காலத்திற்கு மேலாக லாபம் ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கது. வங்கியானது 509 கிளைகள் மற்றும் 12 மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றை கொண்டுள்ளது. நாட்டில் உள்ள 16 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களில் தனது விரிவாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு ஏறத்தாழ 5 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வருகிறது.

27.10.2022 அன்று சென்னையில் நடைபெற்ற இயக்குனர் குழு கூட்டத்தில் 2022 - 23 முதல் அரையாண்டின் நிதிநிலை தணிக்கை முடிவுகள் இறுதி செய்யப்பட்டது. வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. எஸ். கிருஷ்ணன் அவர்கள் தணிக்கை செய்யப்பட்ட முதல் அரையாண்டு நிதிநிலை அறிக்கையினை வெளியிட்டார். பொது மேலாளர்கள், தலைமை நிதி அதிகாரி மற்றும் மூத்த அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

2022 - 23 முதல் அரைநிதியாண்டில் வங்கியின் செயல்பாட்டினை விளக்கும் சிறப்பம்சங்கள்

2022 - 23 முதல் அரை நிதியாண்டில் வங்கியானது பல்வேறு குறிப்பிடத்தக்க சாதனைகளை புரிந்துள்ளது. இதற்கு வங்கியின் திட்டமிட்ட நேர்த்தியான கொள்கைகளும், இயக்குனர் குழு தரும் உற்சாகம், உயர் நிர்வாகக் குழுவின் சீரிய திட்டம் மற்றும் அதனை செயல்படுத்தும் அணுகுமுறை, வங்கி ஊழியர்களின் அயராத உழைப்பும் மற்றும் இவற்றிற்கு எல்லாம் மேலாக வாடிக்கையாளர்கள் தொடர்ந்து தரும் பொன்னான ஆதரவு ஆகியவை தான் இச்சாதனைகளை எட்டிட உதவியது என்றால் அது மிகையாகாது.

2022 - 23 முதல் அரை நிதியாண்டில் வங்கியானது தனது மொத்த வணிகத்தில் 7.43% வளர்ச்சி அடைந்து ‘78,013.12 கோடியை எட்டியுள்ளது.

# சாவரின் வெல்த் நிதி நிறுவன வாரியத் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த லட்சுமி நாராயணன் நியமனம்

சென்னை, அக்டோபர் 30 2022: எஸ்.டபிள்யூ.எப்.ஐ., எனும் சாவரின் வெல்த் நிதி நிறுவனம், நிறுவன முதலீடுகள் மற்றும் சர்வதேச முதலீடுகள் ஆகியவற்றில், மிக பிரபலமான மற்றும் நம்பகத்தன்மை உடைய நிறுவனம்.

இந்தியாவில் பிறந்து, சிறந்த முதலீட்டாளரும் மற்றும் தொழில்முனைவோரான லட்சுமி நாரயணனை வாரியத் தலைவராக நியமனம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

எஸ்.டபிள்யூ.எப்.ஐ., பல்வேறு நாடுகளைச் சேர்ந்த, சாவரின் சொத்து நிதிகள், பொது ஓய்வூதியம், மத்திய வங்கிகள் மற்றும் இதர நீண்ட கால பொது முதலீட்டாளர்களை உள்ளடக்கியது. எஸ்.டபிள்யூ.எப்.ஐ., உறுப்பினர்கள், இந்திய நிறுனங்களின் மீது முதலீடு செய்தல் அல்லது முதலீடு செய்வதில், கடந்த சில ஆண்டுகளில் இருந்து ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மூலதன சந்தை, பங்கு முதலீடு, ரியல் எஸ்டேட் ஆகியவற்றில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக நாராயணனுக்கு அனுபவம் உள்ளது. பொறுப்பாளர், வெற்றியாளர், நிதி சார்ந்த சமூகத்தினரிடம், இவருக்கு மிகுந்த மரியாதை உள்ளது. நோக்கம் சார்ந்த வணிக யுக்தி மற்றும் வெளிப்படைத்தன்மை மற்றும் இ.எஸ்.ஜி.,யில் நிபுணர்.

எஸ்.டபிள்யூ.எப்.ஐ.,யின் வளர்ச்சியை அதிகரிக்கவும், எஸ்.டபிள்யூ.எப்.,ஐயின் தளம், ஆராய்ச்சி, தரவு மற்றும் சந்தா உயரம், வெளிப்படைத்தன்மை குறீயீடுகள் மற்றும் வணிக நிகழ்வுகள் ஆகிவற்றை விரிவுபடுத்த, இதன் தலைவராக, நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரியுடன் நாராயணன் இணைந்து பணியாற்றுவார்.

‘‘மதிப்புமிக்க நிறுவனத்தில் இணைவது எனக்கு பெருமையாக உள்ளது. 2008 முதல், செத்து மேலாண்மை துறையில் நம்பகமான வழக்கறிஞராக, கண்காணிப்பாளராக, பங்குதாரராக எஸ்.டபிள்யூ.எப்.ஐ., சேவையாற்றி வருகிறது.

இதன் சிறந்த வெளிப்படைத்தன்மையால், முடிவு மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு உந்து சக்தியாக உள்ளது. மைக்கேல் உருவாக்கிய கட்டமைப்பை விரிவாக்கம் செய்வதற்காக, உலக அளவில் பொது நிதி தரவுகளின் ஆதாரமாகவும், நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் முதவீட்டு மேலாளர்களுக்கான சிறந்த இணைப்பாளராகவும் செயல்பட, தளத்தை விரிவாக்கம் செய்ய உதவுவேன்,’’ என, லட்சுமி நாராயணன் தெரிவித்துள்ளார்.

எஸ்.டபிள்யூ.எப்.ஐ., தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரி மைக்கேல் மதுவெல் கூறுகையில், ‘‘கடந்த சில ஆண்டுகளாக, இந்தியாவில் முதலீடு செய்ய சர்வதேச முதலீட்டாளர்களிடம் தேவை அதிகரித்து வருவது தெரிய வருகிறது.

எஸ்.டபிள்யூ.எப்.ஐ., சந்தா (ஆராய்ச்சி தயாரிப்பு) மற்றும் உறுப்பினர்களுக்கு நாங்கள் வழங்கும் சேவை, இந்திய வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்வோம்.

நிறுவன முதலீட்டாளர்கள் சமூகம் மற்றும் சொத்து மேலாண்மை துறையை மையமாக கொண்டு, இந்தியாவில் ஒரு ஆராய்ச்சி மையத்தை உருவாக்க நாங்கள் திட்டமிட்டு உள்ளோம்.

மேலும், இந்தியாவில் ஒரு அலுவலகம் உருவாக்குவது, வாடிக்கையாளர்கள் முதலீடுகள் குறித்து தெரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். இத்துடன், வேலைவாய்ப்பை உருவாக்க வழிவகுத்து, நாட்டின் சொத்து மேலாண்மை துறை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய உதவியாக இருக்கும். எஸ்.டபிள்யூ.எப்.ஐ.,யின் தலைவராக லட்சுமி இருப்பது, எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

மூலதனச் சந்தையில், அவரது சிறந்த அனுபவம் மற்றும் அறிவாற்றலைக் கொண்டு, சிறந்த யுக்திகளை உருவாக்கி, எங்களின் இலக்கான மூலதன சந்தை விரிவாக்கம் மற்றும் இந்தியாவின் உண்மையான ஆற்றலை பயன்படுத்துவதற்கு, அவர் எங்களுக்கு வழிகாட்டுவார்,’’ என்றார்.

நாராயணன், அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில், தொழில்களை உருவாக்குதல், ரியல் எஸ்டேட் மற்றும் ஸ்டார்ட் அப்களில் முதலீடு செய்த சிறந்த அனுபவம் உள்ள முதலீட்டாளர் மற்றும் தொடர் தொழில்முனோவர் ஆவார்.

இவர், உலகம் முழுதும் வலுவான தொடர்பை உருவாக்கி உள்ளார். மேலும், ஹார்டுவேர்டு பல்கலைக்கழகத்தின், கென்னடி ஸ்கூல் ஆப் கவர்னரில், சான்றளிக்கப்பட்ட மூத்த நிர்வாக உறுப்பினராக சேவையாற்றுகிறார்.

லட்சுமி பொறுப்புள்ள வணிக உத்திகள் உடையவர். அவர்., இருபது ஆண்டுகளுக்கும் மேலாலாக இந்தியாவில் உள்ள தொழில்முனைவோர் லாபகரமாக தொழில்முயற்சிகளை மேற்கொள்ள உதவி செய்துள்ளார்.

சமீபத்தில் துவங்கப்பட்ட ஹோம்ஸ் குளோபல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் துணை தலைவராக உள்ளார். இது, அமெரிக்காவில், நிலைத்த மற்றும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தக் கூடிய வகையிலான கட்டடங்களை கட்டுவதற்காக உருவாக்கப்பட்ட, முதல் தேசிய வீட்டு நிறுவனமாகும். ஆசியா சந்தையில, ரியல் எஸ்டேட் நிதியத்தையும் கடந்த காலத்தில் நிறுவி உள்ளார். இந்தியாவின் மிகப்பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனங்களில் ஒன்றின் 8 பில்லியன் அமெரிக்கா டாலர் சொத்துக்களை நிர்வாகித்தார். இந்தியாவின் முன்னணி கல்வி நிறுவனம் மற்றும் முன்னணி உரிமையாளருக்கான ஆலோசனை நிறுவனத்தில் பணியாற்றி உள்ளார்.

சாவரின் வெல்த் நிதி நிறுவனம் பற்றி

சாவரின் வெல்த் நிதி நிறுவனம், சாரின் சொத்து நதி, பொது ஓய்வூதியம், மத்திய வங்கிகள் மற்றும் இதர நிறுவன முதலீடுகள் மற்றும் இதர நீண்ட கால பொது முதலீட்டாளர்கள் முதலீடு செய்வது, சொத்து ஒதுக்கீடு செய்தல், ஆபத்து, நிர்வாகம், பொருளாதாரம், கொள்கை, வர்த்தகம் மற்றும் இது தொடர்பான இதர பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக உலக அளவில் வடிவமைக்கப்பட்டது.

பல்வேறு கார்ப்பரேட் நிறுவனங்கள், நிதியங்கள் மற்றும் அரசு துறைகளுக்கு, சிறந்த ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறோம்.

சாவரின் வெல்த் நிதி நிறுவனம், நடப்பு சிக்கல்கள் மற்றும் போக்குகள் குறித்த உள்ளாந்த தகவல்களை வழங்குகிறது. உலக அளவில் பொதுத்துறை சொத்து உரிமை மற்றும் மேலாண்மை தொடர்பாக, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகும், தி சாவரின் வெல்த் பப்ளிகேஷன் முதன்மையான ஒன்று. உலக அளவில், சாவரின் நிதி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு, சாவரின் வெல்த் நிதி நிறுவனம் வசதி செய்து கொடுக்கிறது. கூடுதல் தகவல்களை www.swfinstitute.org. என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

# நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு உயிரை காப்பாற்ற முன்வந்த தயாரிப்பாளர் கலைப்புலி எஸ்.தாணு




சென்னை, அக்டோபர் 30 2022: இந்திய திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குனருமான கலைப்புலி எஸ் தாணு, சென்னை காவேரி மருத்துவமனையில் நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் 33 வயது பெண்ணுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வந்துள்ளார். கணவனை இழந்த அந்தப்பெண், கடந்த இரண்டு வருடங்களாக இடைநிலை நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இது அவரது நுரையீரலில் காயங்களை ஏற்படுத்தி உள்ளது. தற்போது அவர் இரட்டை நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கிறார். மேலும் தமிழ்நாடு மாற்று அறுவை சிகிச்சை ஆணையத்தில் பதிவும் செய்யப்பட்டு இருக்கிறார்.

தயாரிப்பாளர் வி கிரியேஷன்ஸ் கலைப்புலி எஸ். தாணு, நோயாளியின் மருத்துவ சிகிச்சைக்காக அவரது குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளார். சென்னை காவேரி மருத்துவமனை மருத்துவ இயக்குநர் டாக்டர் ஐயப்பன் பொன்னுசாமி மற்றும் காவேரி மருத்துவமனையின் மனநல மருத்துவர் யாமினி கண்ணப்பன் ஆகியோர், நோயாளியின் குடும்பத்தினர் சார்பாக இந்த தொகையை பெற்றுக்கொண்டதோடு, அவரது உன்னத செயலுக்கு நன்றியும் தெரிவித்தனர். காவேரி மருத்துவமனை இந்த மாற்று அறுவை சிகிச்சைக்கான மொத்த செலவை மானியமாக வழங்கியுள்ளதுடன் மேலும் பல்வேறு நன்கொடையாளர்களிடமிருந்து நிதி திரட்டவும் திட்டமிட்டுள்ளது.


# ரியல்மி ஒரு இடையூறில்லாத சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்காக புதிய ரியல்மி கேர் சேவை அமைப்பை அறிவித்துள்ளது

சென்னை, அக்டோபர் 30 2022: மிகவும் நம்பகமான தொழில்நுட்ப பிராண்டான ரியல்மி நிறுவனம், அதன் வாடிக்கையாளர்களுக்கு இடையூறில்லாத மற்றும் எளிய வாடிக்கையாளர் ஆதரவை வழங்குவதற்காக ரியல்மி கேர் சேவை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டு திருப்தியான சேவைகளை வழங்குவது என்ற கூடுதல் நோக்கத்துடன் அதன் வளர்ச்சியின் இரண்டாவது கட்டத்திற்குள் பிராண்ட் காலடி எடுத்துவைப்பதன் அடையாளமாக இந்த அறிமுகம் அமைகிறது. இந்தியாவில் ரியல்மியின் இப்பொழுது வாட்ஸ்அப் முதல் சமூக ஊடகங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள 1000+ சேவை மையங்கள் வரையிலான ஆன்லைன் மற்றும் ஆஃப்லைன் டச்-பாயிண்ட்கள் மூலமாக 70 மில்லியன் + வாடிக்கையாளர்கள், வாடிக்கையாளர் சேவைகளை எளிதாக பெறலாம்

உயர்தர சேவை மூலம் வாடிக்கையாளர் சேவை அனுபவம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்த ரியல்மி நிறுவனம் உறுதிகொண்டுள்ளது. ரியல்மியின் மேம்படுத்தப்பட்ட சேவை அமைப்பாக, ரியல்மி கேர் "நுகர்வோர் சார்ந்த" என்ற கருத்தாக்கத்தை மேலும் மேம்படுத்துவதை எடுத்துக் கூறுகிறது. ரியல்மி இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரியும் ரியல்மி நிறுவனத்தின் துணைத் தலைவரும் ரியல்மி இன்டர்நேஷனல் பிசினஸ் குழுமத்தின் தலைவருமான திரு மாதவ் சேத் கூறுகையில், "ரியல்மி கேர் என்பது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டிற்கும், எங்கள் வாடிக்கையாளர் அனுபவத்தை மேலும் கட்டமைப்பதற்கு நாங்கள் கொண்டிருக்கும் நோக்கத்திற்கும் ஒரு சான்றாகும். இந்த திட்டத்தின் மூலம், 'சேவைத் தரம்' அடித்தளமாகவும், 'நிலைத்தன்மை, வசதி மற்றும் கவனிப்பு' ஆகியவற்றை முக்கிய மதிப்புகளாகவும் கொண்ட டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் ஒரு முழுமையான சேவையை நாங்கள் உறுதி செய்கிறோம். ரியல்மியின் இந்த சேவையானது இந்த தொழில்நுட்பத் துறையில் வாடிக்கையாளர் அனுபவத்தை அளப்பதற்கான அளவுகோல் வரையறையாக உருவெடுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ரியல்மி நிறுவனமானது, ரியல்மி கேர்+ சேவையானது ரூ.489 முதல் தொடங்கி குறைந்த கட்டணத்தில் கிடைக்கும் என்றும் அறிவித்துள்ளது. 1 வருட நீட்டிக்கப்பட்ட வாரண்டி, 1 வருட ஸ்கிரீன் புரொடக்ஷன் மற்றும் 1 வருட ஆக்ஸிடெண்டல் மற்றும் லிக்விட் புரொடக்ஷன் உள்ளிட்ட ஏராளமான பேக்கேஜுகள் மூலம் முழுமையான மொபைல் பாதுகாப்பு சேவைகளைப் பெற இந்த சலுகைத் திட்டம் வாடிக்கையாளர்களுக்கு உதவுகிறது. ரியல்மி கேர்+ சந்தாதாரர்கள் ரியல்மியின் நம்பகமான வல்லுநர்கள், சிரமம் இல்லாத கிளைம் செயல்முறை, நம்பகமான உதிரிபாகங்களை விற்கும் அங்கீகரிக்கப்பட்ட சேவை மையம் ஆகியவற்றிற்கான அணுகலைப் பெறுவார்கள். ரியல்மி கேர்+ ஆனது ஃப்ளிப்கார்ட் மற்றும் ஆஃப்லைன் சேனல்கள் உட்பட ஆன்லைனில் தற்போதுள்ள மற்றும் புதிய வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்கிறது. வாடிக்கையாளர்கள் <https://event.realme.com/in/realme-care-plus><https://event.realme.com/in/realme-care-plus> -ஐப் பயன்படுத்தி கேர்+ திட்டத்தை வாங்கலாம்

# நகராட்சி நிர்வாகத் துறை வழிகாட்டு குழுவில் பேரமைப்பு நிர்வாகிகள் நியமனம்- விக்கிரமராஜா வரவேற்பு



சென்னை, அக்டோபர் 30 2022: தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:- தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, தமிழக அரசு நகராட்சி, பேரூராட்சி, உள்ளாட்சிக் கடைகளுக்கான வாடகை முரண்பாடு, பெயர் மாற்றம், புதிய கடைகள் ஒதுக்கீடு, சம்பந்தமாக இருந்து வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண "வழிகாட்டுதல் குழு" அமைத்துள்ளது. அக்குழுவில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பிரதிநிதிகளாக பொதுச்செயலாளர் கோவிந்தராஜுலு, வேலூர் மாவட்டத் தலைவர் ஞான வேலு ஆகியோரை நியமனம் செய்தது வரவேற்கதக்கது. இதற்காக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் துறைசார்ந்த அமைச்சர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

# தேவர் ஜெயந்தி, குருபூஜை விழா - 10.4 கிலோ எடை கொண்ட வெள்ளி கவசம் வழங்கி ஓ.பி.எஸ். மரியாதை



சென்னை, அக்டோபர் 30 2022: முத்துராமலிங்க தேவரின் 115-வது குருபூஜை மற்றும் ஜெயந்தி விழாவை முன்னிட்டு பசும்பொன் தேவர் நினைவிடத்தில் உள்ள தேவர் சிலைக்கு தமிழக அரசு சார்பில் அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிலையில், பசும்பொனில் முத்துராமலிங்க தேவருக்கு மரியாதை செலுத்திய பின் முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: சமீபத்தில் தேவர் தங்ககசம் மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கிய தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்கது. அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளர் நான் தான். அதிமுக சார்பிலேயே வெள்ளிக்கவசத்தை வழங்கி உள்ளேன். வெள்ளிக்கவசம் 10.4 கிலோ எடை கொண்டது. ஒன்றரை கோடி தொண்டர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று தான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன் என தெரிவித்தார்.